# 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்

## ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

## MCOP No. 1119/2025

| | |
|---|---|
| **சாட்சியின் வரிசை எண்** | மசா1 |
| **பெயர்** | ரமேஷ் |
| **க/த.பெயர்** | சந்திரன் |
| **வயது** | 40 |
| **விலாசம்** | செம்பாக்கம், சென்னை |
| **தொழில்** | ... |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 22.07.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். வாகன விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். இதில் என்னை எனது தரப்பில் முதல் சாட்சியாக விசாரித்து கொண்டு எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதான். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். இதில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துக்கொள்ள வேண்டுகிறேன். முதல் தகவல் அறிக்கை மசாஆ1, விபத்து பதிவு மசாஆ2, விடுவிப்பு சான்றிதழ் மசாஆ3, மருத்துவ பில்கள் ரூ.2,800/ மசாஆ4, ஊடுகதிர் படம் அசல் மசாஆ5, மனுதாரரின் அடையாள அட்டை மசாஆ6, மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் மசா7, மனுதாரரின் ஆதார் அட்டை நகல்

மசாஆ8, மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல் மசாஆ9, மனுதாரரின் வருமான வரி அட்டை நகல் மசாஆ10, எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் மசாஆ11, காப்பீடு சான்று நகல் மசாஆ12, சம்பள சான்றிதழ் மசாஆ13.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த விபத்து சமயத்தில் நான் என்ன வாகனத்தில் சென்றேன் என்றால் என் மாமனாருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தினை நான் தான் ஓட்டி சென்றேன். விபத்து நடந்தவுடன் செம்பாக்கத்தில் உள்ள ஜோலன் மருத்துமனைக்கு சென்றேன். விபத்து சம்பந்தமாக 04.08.2024ல் காவல் நிலையத்தில் 7 நாட்கள் காலத்தாமதமாக புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். 4 நாட்கள் மருத்துமனையில் இருந்ததால் புகார் கொடுக்க முடியவில்லை. மருத்துமனையில் இருக்கும்போது போலிஸார் புகார் பெறவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டு மருத்துமனைக்கு சென்ற போது நான் சுயநினைவில் தான் இருந்தேன் என்றால் ஆம். மருத்துவமனையில் இந்த காயம் எப்படி ஏற்பட்டது என்று மருத்துவர் என்னிடம் கேட்டார்களா என்றால் கேட்டார்கள் சாலை விபத்தில் ஏற்பட்டது என்று சொன்னேன். ஆட்டோ இடித்ததில் விபத்து ஏற்பட்டது என்று சொன்னேன். என்னிடம் காட்டப்படும் மசாஆ3ல் ஆட்டோமீது மோதாமல் இருப்பதற்கு வாகனத்தில் இருந்து விழுந்து விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆம். மசாஆ3ல் ஆட்டோ இடித்து விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இதில் குறிப்பிடவில்லை என்னுடன் இருந்தவர்கள் அவ்வாறு சொல்லியிருப்பார்கள். மசாஆ3ல் குறிப்பிட்டுள்ள விவரங்கள் தவறு என்று மருத்துவமனையில் மாற்றுவதற்கு முயற்சி செய்தேனா என்றால் இல்லை. நானே வாகனம் ஓட்டி சென்று விழுந்ததால் தான் எந்த போலிஸாரும் வந்து புகார்

பெறவில்லை என்றால் சரியல்ல. நான் விழுந்ததால் இழப்பீடு கிடைக்காது என்று சொல்லி 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை பயன்படுத்தி தாமதமாக புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மசாஆ2 விபத்து பதிவு சான்றிதழ் நகல் என்பதால் நான் தான் தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. லட்சுமி என்பவர் என் மனைவி. காவல் நிலையத்தில் என் மனைவி புகார் கொடுத்தார் என்றால் ஆம். 04.08.2024 ல் புகார் கொடுத்துள்ளபோது ஆனால் மசாஆ2. 29.07.2024 ல் போலிசார் கையோப்பம் போடப்பட்டுள்ளது என்பதால் இந்த ஆவணம் நானாக தயார் செய்தது என்றால் சரியல்ல. இந்த ஆவணம் நான் இழப்பீடு பெறுவதற்காக 1ம் எதிர்மனுதாரர் ஆட்டோவை பயன்படுத்தி தயார் செய்யப்பட்ட ஆவணம் என்பதால் தான் இதில் மருத்துவர் மேல் கையோப்பமும் காணப்படவில்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய வாகனத்தின் வாகன சேதார அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகனம் என்னை இடிக்கவில்லை நான் தான் தானாக விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. அதனால் 1ம் மற்றும் 2ம் எதிர்மனுதாரர்கள் ' இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் சிட்டி கார்ப் சர்வீஸ் இந்தியா பிரைவேட் லிமிடட் என்ற நிறுவனத்தில் பணிபுரிந்தேன். மாதவருமானம் ரூ,2,55,595/ பெற்றேன். தற்போது நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தற்போது வேலை செய்யவில்லை. வேலை செய்யவில்லை என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இன்றைய தேதி வரை என்னுடைய வருமான வரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடந்த வருடம் வருமான வரி கணக்கு அரசாங்கத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். நான் வேலைக்கு செல்லவில்லை என்று இழப்பீடு அதிகம் பெறுவதற்கு பொய்யாக சொல்கிறேன்

என்றால் சரியல்ல. இந்த சிகிச்சை பெற்ற காலத்தில் வருமான இழப்பீடு ஏற்பட்டது என்பதற்கு ஆவமணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தினால் எனக்கு எந்த வருமான இழப்பீடும் இல்லை என்பதால் தான் அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் குணமாகிவிட்டது ஊண பாதிப்பு ஏதும் இல்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கேட்டுள்ள இழப்பீடுகளுக்கு ஆவணம் தாக்கல் செய்யாததால் அந்த தலைப்புகளின் கீழ் இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்து நான் கீழே விழுந்து என்னுடைய கவனக்குறைவால் நடந்ததால் இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**X**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது,

**5 வது நீதிபதி**
**சென்னை**